1972 ஆகஸ்ட் 18]

* 29 Q.—THIRU G. SWAMINATHAN AND THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there has been any decrease in the sale of raffle tickets after the suspension of prohibition in the State; and

(b) if so, the percentage of decline?

திரு. ஜி. சுவாமிநாதன் :
திரு. வ. ஈஸ்வரமூர்த்தி } மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில் மதுவிலக்கு செயல்படுவதை நிறுத்தி வைத்த பிறகு பரிசுச் சீட்டு விற்பனை குறைந்துள்ளதா?

(இ) ஆமெனில், விற்பனை எந்த சதவீதத்தில் குறைந்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம். 1970 செப்டம்பரிலிருந்து 1971 பிப்ரவரி வரையிலும் கூட விற்பனையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

(இ) விற்பனையில் ஏற்பட்ட சரிவின் சதவீதம் 7.7 ஆகும்.

* 30 Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the sale of raffle tickets of other States has been banned within our State; and

(b) if so, the reasons therefor?

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பிற மாநில அரசுகளின் பரிசுச் சீட்டுகள் நம்முடைய மாநிலத்திற்குள் விற்கப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?